# NEWSLETTER

No 55 , Kachcheri Nallur Road, Jaffna | +94 21 222 6608 -9 | info@cciy.lk | www.cciy.lk

CHAMBER OF COMMERCE AND INDUSTRIES OF YARLPANAM

யாழ்ப்பாணம் வர்த்தகத் தொழிற்துறை மன்றம்

## Waste management

**Economic development, living standard, increase and spread of business and industrial activities cause huge amount of waste in the environment**



## webinar

**Most of the fire occurrence in business place because ……**



Wednesday Market-2022



Stock Market






**members are the strength of an organization**

# Wednesday Market- 2022

Every Wednesday, the Faculty of Commerce and Management studies makes chances to SMEs to showcase their products at their premises by creating a platform of **Wednesday-2022.** CCIY, in compliance with Memorandum of Understanding signed by & between CCIY and FMSC facilitates SMEs for this market to motivate them





About Rs 10,000 generated on Sep 28, 2022 by Parampariyam production by marketing their food products and got some business linkages as well












The enterprise named Amma industries sold their food products of several women entrepreneurs and on Oct 10, 2022 and earned Approximately Rs. 22000

# இணையவழிக் கருத்தரங்கு

யாழ்ப்பாணம் வர்த்தகத் தொழில்துறை மன்றமானது (CCIY) தனது அங்கத்தவர் மற்றும் அங்கத்தவர் அல்லாத சிறிய மற்றும் நடுத்தர தொழில் முயற்சியாளர்களை இலக்காககொண்டு இணையவழிக் கருத்தரங்குகளை மாதந்தோறும் வெற்றிகரமாக நடாத்துகின்றது. அந்தவகையில் கடந்த செப்டம்பர் மாதம் **வியாபாரச்சூழலில் சாத்தியமான அனர்த்தங்களும் அதற்கான தயார்ப்படுத்தலும்**” என்ற தலைப்பின் கீழ் இணையவழிக் கருத்தரங்கு வளவாளராக யாழ்ப்பாண பல்கலைக்கழக புவியியற்துறை சிரேஸ்ட விரிவுரையாளர் கலாநிதி நாகமுத்து பிரதீபராஜா அவர்கள் அனர்த்தம் தொடர்பான தனது புலமைசார் அறிவினை பகிர்ந்துகொண்டார். விசேடமாக தீ அனர்த்தம்தொடர்பான நடைமுறை உதாரணங்களையும் வெளிக்கொணர்ந்து தெளிவுபடுத்தினார்.

கலந்துரையாடப்பட்ட விடயங்கள் பின்வருமாறு

2012-2022 இடைப்பட்ட காலப்பகுதியில் அண்ணளவாக 182 வர்த்தக நிலையங்கள் தீயினால் கடுமையான பாதிப்புக்களை எதிர்கொண்டுள்ளன இதில் 176 தீ அனர்த்தங்கள் மனித கவனக்குறைவினாலும் மீதி 6 எலி மற்றும் அணில் போன்ற விலங்குகளினாலும் ஏற்பட்டுள்ளது. விசேடமாக வணிக நிலையங்களில் தீ பாதிப்பு அதிகமாக காணப்படுகின்றது ஏனென்றால் ஒரு குறுகிய இடத்தில் விற்பனைக்காக அல்லது சேவைக்காக அதிகளவான கருவிகள் மற்றும் பொருட்கள் களஞ்சியபடுத்தியிருக்க வேண்டிய தேவை காணப்படுகின்றமேயாகும். மேலும் இலங்கை தேசிய அனர்த்த முகாமைத்துவ நிலையத்தின் பிரகாரம் நாட்டில் விலங்குகளால் ஏற்படுத்தப்படும் அனர்த்தத்தை அடுத்து தீயினால் ஏற்படுத்தப்படுகின்ற அனர்த்தமே காணப்படுகின்றது. குறிப்பாக ஒப்பீட்டளவில் தொழிற்சாலைகள், வணிக நிலையங்கள், உணவகங்கள் இதன் தாக்கம் அதிகம். தொடர்ந்து தொழிற்சாலை ஒன்றில் தீ விபத்து ஏற்படுவதற்கான காரணங்கள், தீ குறியீடுகள், சமிக்ஞைகள், முதலுதவி அம்சங்கள், தீயின் போதான வெளியேற்றப்பகுதிகள், உயிரிழப்பு மற்றும் காயங்கள் ஏற்படுவதற்கான காரணங்கள், பொருட்களின் வகைகளை இடைவெளிவிட்டு அடுக்குதல் போன்ற விடயங்கள் பற்றியும் பங்குபற்றுனர்கள் தெளிவூட்டப்பட்டார்கள். அதனைத்தொடர்ந்து பங்குபற்றுனரின் கேள்விக்கான பதில்களும் விதந்துரைக்கப்பட்டது.









# வர்த்தக கைத்தொழில் கழிவுகளும் அதன் முகாமைத்துவமும்
# Commercial and Industrial waste and its management

தொடர்ச்சி……

பொருளாதார மேம்பாடு, வாழ்க்கைத்தர உயர்வு வர்த்தக கைத்தொழில் பெருக்கம் மற்றும் பரம்புகை என்பன தற்போது அதிக கழிவுகளை சூழலில் சேர்க்கின்றன. வெளியேற்றப்படுகின்ற கழிவுகளால் சுற்றுச்சூழல்ரீதியான எதிர்மறையான பாதிப்புக்களான நீர் மாசடைதல், காலநிலை மாற்றம், வளிமாசடைதல், நிலம் மாசடைதல், மற்றும் மனித ஆரோக்கியத்துக்கு பாதிப்பு என்பன ஏற்படுகின்றன.

## நீர் மாசடைதல்

இரசாயனத்தன்மையானதும் ஆபத்தான நச்சுத்தன்மையானதுமான திண்ம திரவக் கழிவுகள் மழை நீருடன் மேற்பரப்பில் அடித்துச்செல்லப்பட்டோ அல்லது உத்தேசமாக குளம், நீர் மற்றும் ஆறு போன்ற நீர்நிலைகளில் கொட்டப்படுவதனால் நீர் மாசாக்கம் நடைபெறுகின்றது அதுமட்டுமல்லாது குறிப்பாக பிளாஸ்ரிக் மற்றும் பொலித்தீன் கழிவுகள் நிலத்தினுள் தேங்கி நின்று மழைநீரை உட்புகவிடாமல் தடுக்கின்றது. மேலும் மலசலகூட கழிவுகளில் e-coli மற்றும் coliform போன்ற பக்ரீயாக்கள் காணப்படும் யாழ்ப்பாணக்குடா நாட்டில் அதிகம் மலசலகூடக் குழிகளின் அடிப்பகுதி மூடப்படாத நிலையில் நிலத்துடன் நேரடித்தொடர்பை கொண்டிருப்பதனால் (bottomless pit) நிலத்தடிநீருடன் மலக்கழிவுகள் கலந்து மேற்குறிப்பிட்ட பக்ரீயாக்கள் காணப்படுகின்றன என பல்வேறு ஆய்வுகள் கூறுகின்றன





## வளி மாசடைதல் மற்றும் காலநிலை மாற்றம்

வர்த்தக கைத்தொழில் செயற்பாடுகளில் பயன்படுத்தப்படுகின்ற இயந்திரங்களினாலும் கழிவுகளை எரியூட்டுவதினாலும் வெளியிடப்படுகின்ற புகை மற்றும் உக்கக்கூடிய கழிவுகள் அழுகுகின்றபொழுதும் வெப்பத்தை அதிகளவில் தக்கவைக்ககூடிய காபனீர்ரொக்சைட், மிதேன், காபன்மொனோக்சைட்டு போன்ற பச்சை வீட்டுவாயுக்கள் மற்றும் தூசு துணிக்கைகள் வளிமண்டலத்துக்கு விடப்பட்டு வளியினை மாசுபடுத்துகின்றது



குறிப்பாக கழிவுகள் உக்குகிறபொழுது மிதேன், நைட்ரோஒக்சைட் போன்ற வாயுக்கள் வெளியிடப்படுகின்றன இவைகள் ஏனைய பச்சைவீட்டு வாயுக்களை விட குறைந்த வீதமாக வளிமண்டலத்தில் இருந்தாலும் அதிகளவு வெப்பத்தை கொள்ளகூடியதாக காணப்படுகின்றது இவ் விளைவு (global warming) பூகோளவெப்பமயமாதலுக்கும் தொடர்ந்து காலநிலைமாற்றத்துக்கும் வழிவகுக்கின்றது தற்போது நாம் எதிர்கொள்கின்ற மழை இல்லாமை அல்லது குறுகிய காலத்தில் அதிக மழை இதனால் வெள்ளம், வறட்சி, அதிக வெப்பம், சூறாவளி போன்றவற்றுக்கு இவைகளே காரணமாகின்றன

தொடரும்……

# NEW MEMBERS AT CCIY

**SK FARM & AGRICULTURE (PVT)Ltd**
No 14, 2nd Cross Street, Uthayanagar, Kilinochchi.

**AZE IT CONSULTANCY (PVT) Ltd**
No-63, Karuvepulam Road, Kokuvil East, Kokuvil.



**ALAZA FC(PVT)Ltd**
No 159, Muslim College Road, Jaffna



**MATHAVA VIDEO IT & MULTI TRADERS**
No-40/5 A - Railway East Lane, Kantharmadam, Jaffna.

**KUBERA LAXMIY EW BAG MANUFACTURES**
Palali Road, Urumpirai South, Jaffna.

- ALPHA MIXTURE
- ANAMITRA HOUSE
- CHITRA PAPADAM
- ALPHA SWEET
- EVER TREE FRUIT PRODUCTS PVT LTD
- KOKULAM RICE MILL SHARIBATH MIXTURE
- SEMPULAM DRY FOOD (PVT)ltd
- S P K ROCK (PVT) LTD
- SRI BAVANI INDUSTRY
- TASTRAA (PVT) LTD
- SUTAPY FOODS

A set of Commercial and industrial enterprises that obtained Barcodes from CCIY in the past days



# பங்குச் சந்தையும் முதலீடும்

பங்குச் சந்தை தொடர்கிறது ......

எந்தளவு பணத்தை இழக்கத் தயாராக இருக்கிறீர்கள் என்பதைப் பொறுத்து நீங்கள் எப்படிப்பட்ட ரிஸ்கை சந்திக்க தயார் என்பது தெரியும். நீங்கள் போட்ட அத்தனை பணமும் போனால் கூட பரவாயில்லை என்று நினைத்தால் நீங்கள் ஒரு high risk taker, நடுத்தரமாக இழக்கத் தயார் என்றால்இ நீங்கள் ஒரு Medium rish taker கொஞ்சம் இழக்கத் தயார் என்றால்இ நீங்கள் ஒரு Low risk taker. எதையுமே இழக்கத் தயார் இல்லை என்றால், நீங்கள் ஒரு அல்ட்ரா கன்சவர்டிவ் person. ரிஸ்க் எடுக்காவிட்டால் வளர்ச்சி இல்லை என்பதை ஏற்கனவே சொல்லியிருந்தோம் அல்லவா?

வெவ்வேறு முதலீட்டு முறைகள் பற்றியும் அவற்றில் உள்ள நன்மை தீமைகள் பற்றியும் பங்குகளை எவ்வாறு மதிப்பிடுவது என்பது பற்றியும் இனி பார்க்கலாம். அதற்கு முன் பங்கு மதிப்பீட்டிற்காக பயன்படுத்தும் வார்த்தைகள் பற்றி அறிந்து கொள்வது அவசியம். காரணம் பங்குகளை அலசி ஆராய இவைதான் அடிப்படை. ஒரு சிறிய உதாரணத்துடன் இதைப் பார்க்கலாம். ABC என்கிற பெயரில் நீங்கள் ஒரு சுப்பர் மார்க்கெட்டை நடாத்தி வருகிறீர்கள். உங்களின் சென்ற ஆண்டு எளிமைப்படுத்தப்பட்ட வருமான அறிக்கை (Income statement) கீழே கொடுக்கப்பட்டுள்ளது.

ABC கம்பனி

வருமான அறிக்கை ( 2020 – 2021)

| | |
|---|---|
| மொத்த விற்பனை | - 18,50,000 |
| சேதாரம் | - 50,000 |
| கொள்முதல் | - 800,000 |
| சம்பளம் மற்றும் பிற செலவுகள் | - 500,000 |
| தேய்மானம் மற்றும் வரிக்கு முன் இலாபம் | - 500,000 |
| தேய்மானம் | - 10,000 |
| இலாபம் வரிக்கு முன் | - 490,000 |

வருமான அறிக்கை என்பது ஒரு நிறுவனத்தின் வரவு செலவுகளை காண்பிக்கும். இதில் நிறுவனம் பெரிதாக பெரிதாக பல விபரங்கள் வரும். ஆனால் நாம் புரிந்து கொள்வதற்கு ஏற்ற மாதிரி ABC சுப்பர் மார்க்கெட்டின் வருமான அறிக்கையைத் தந்திருக்கிறோம். இந்த சுப்பர் மார்க்கெட்டின் மூலம் உங்கள் தினசரி வருமானம் 5000 ருபாய் என எடுத்துக்கொள்வோம். சென்ற ஆண்டு உங்கள் மொத்த விற்பனை (Total Turnover ) 18.5 லட்சம். அதில் 50,000 சேதாரத்தில் (பொருட்கள் உடைந்தது கெட்டுப்போனது திரும்பி வந்தது என) போய்விட்டது. ஆகையால் உங்கள் நிகர விற்பனை 18 லட்சம். இதில் உங்கள் கொள்முதல் செலவு 8 லட்சம். வாடகை, மின்சாரம், சம்பளம் என அனைத்து செலவுகளும் 5 லட்சம். நீங்கள் பயன்படுத்தும் செலவுகளுக்கு தேய்மானம் உண்டாகும். அதற்காக ஒரு குறிப்பிட்ட செலவை எழுதிக் கொள்ளலாம். இந்த தேய்மானச் செலவு 10,000 என வைத்துக்கொள்வோம். இதன் பின் கிடைக்கும் இலாபமான 4.90 லட்சத்திற்கு நீங்கள் உங்கள் நிறுவனத்தின் அமைப்பை பொறுத்து (உரிமையாளர், பங்குடமை அல்லது கம்பனி) வரி கட்ட வேண்டும்.

தொடரும்......




## DREAM OF AN ENTERPRENER THAT CAME TRUE

## தொழில்முயற்சியாளனின் கனவு நனவான கதை

டயானா பிளாஸ்ரிக் (Dayana plastic & manufacturing) நிறுவனமானது யாழ் நகர எல்லைக்குள் பிளாஸ்ரிக் சார்ந்த கைத்தொழில் நடவடிக்கைகளுக்கு பெயர்பெற்ற ஒரு நிறுவனமாகும். பூச்சிய மூலதனத்தைக்கொண்டு **எண்ணம் தான் வாழ்கை** என்ற கூற்றினை அடிப்படையாகவைத்து வெற்றிபெற்ற டயானா பிளாஸ்ரிக் என்று சமூகத்தில் அறியப்பட்ட தவராசா என்பவர்தான் இதன் உரிமையாளர்.

**பின்னணி**

போர்ச்சூழல் ஒரு பக்கம் இருக்க வறுமை இன்னொருபக்கம் இவரது கல்விபயிலும் வாய்ப்பை தட்டிப்பறித்தது. இவரது ஏழ்மைநிலை மற்றும் நுண் ஆர்வம் இவரது வாழ்வு துளிர்விட வித்திட்டது எனலாம். இதனால் இரும்புவார்ப்பு மற்றும் சிறிய படகுகள் கட்டுதல் போன்ற துறைகளை கற்று தேறினவாரக சமூகத்திற்கு நுழைந்த இவர் இதுசார்ந்த வேலையை பல இடங்களில் தேடியபோதும் கிடைக்கவில்லை எனவே சோர்வடையாது ஏதாவது பயனுள்ளவகையில் செய்யவேண்டும் என்ற உத்வேகத்தில் இந்தியாவில் வசிக்கின்ற தனது நண்பர்களின் உதவியுடன் கற்றுக்கொண்ட நுட்பத்தை பயன்படுத்தி 2000 ம் ஆண்டு பிளாஸ்ரிக் றீசைக்கிள் (plastic recycle ) என்ற பெயரில் இவரது தொழில்முயற்சியாண்மையை ஆரம்பித்தார். 2000ம் ஆண்டிலிருந்து 2008 வரையான காலப்பகுதிவரை வீட்டிலிருந்து சாதாரண மக்களின் உடைந்த வாகன உதிரிப்பாகங்களை ஒட்டுதல் செயற்பாடு மட்டுமே நடைபெற்றது.

பின்னாக **மாற்றம் ஒன்றே மாறாதது என்பதற்கிணங்க** தேவைக்கேற்ப வருமானம் கிடைக்க இலங்கை சுற்றுச்சூழல் அதிகாரசபையின் தொடர்ச்சியான ஆலோசனை மற்றும் அழுத்தத்திற்கேற்ப 2008 ம் ஆண்டு பிளாஸ்ரிக் றீசைக்கிள் (plastic recycle) ஆலை நல்லூர்ப் பகுதியில் அமையப்பெற்றது இதன்விளைவாக சாதாரண மக்களினால் வெளியேற்றப்படுகின்ற பிளாஸ்ரிக் கழிவுகளை சேகரித்து அதை மீள்சுழற்சி செய்து அண்ணளவாக மாதத்திற்கு 10 தொடக்கம் 30 டொன் பிளாஸ்ரிக் கொழும்பிற்கு ஏற்றுமதி செய்யும் அளவிற்கு இவரது எண்ணம் உருப்பெற்றது. இதன் பிரதிபலனாக ஆரம்பம் அற்பமானாலும் முடிவு சம்பூரணமாய் வெளிப்பட்டது எனலாம். அதாவது பிளாஸ்ரிக் மட்டுமில்லாமல் பொதுப்படையாக வெல்டிங் ஆலை மற்றும் சிறுவர் பூங்கா உற்பத்தி என சகல உற்பத்திசார் வேலைகளிலும் பிரகாசிக்க தொடங்கினார் தவராசா.



**தவராசா-உரிமையாளர்-டயானா பிளாஸ்ரிக்**





**சிறுவர் பூங்கா தயாரிப்புக்கள்**

**உற்பத்திகள்**

தேவைக்கும் காலத்திற்குத் ஏற்ப இவரது பல்துறைசார் வியாபாரம் கிளைவிட்டு பரந்து இருப்பதனால் வாகன உதிரிப்பாகங்கள் ஒட்டுதல், சிறுவர்களுக்கான 150 வகையான விளையாட்டுப்பொருட்கள் தயாரித்தல், சிறுவர் பூங்கா அமைத்தல், வெல்டிங் வேலைகள், மோல்டிங், வினைத்திறனாக பயன்தரக்கூடிய அடுப்புகள் என்றவாறு காணப்படுகின்றது. இதுமட்டுமல்லாது வெளிநாட்டுசெலவாணியை ஈட்டவேண்டும் என்ற முனைப்பில் நண்டு பண்ணை அமைப்பதற்கான முன்னெடுப்புக்களையும் மேற்கொண்டுள்ளார் என்பதும் குறிப்பிடத்தக்கது.

**சந்தை வாய்ப்புக்கள்**

வாகன உதிரிப்பாக ஒட்டு வேலைகள் யாழ்ப்பாணத்தையும் பிளாஸ்ரிக் மீள்சுழற்சிக்கான கழிவாக மக்களால் அகற்றப்படுகின்ற கழிவினை சேகரிப்பதற்கு வட மாகாணத்தையும் மீள்சுழற்சி செய்ததன் பின்னர் அதனை ஏற்றுமதி செய்ய கொழும்பு மாநகரத்தையும் எல்லைப்பரப்பாக கொண்டுள்ளார். இலங்கை அரசாங்கத்தினால் கேள்விக்கு விடப்படுகின்ற சிறுவர் பூங்கா டெண்டர்களையும் எடுத்து செய்து வருகிறார் என்பதும் கவனிக்கதக்கது. நண்டு ஏற்றுமதிக்கு வெளிநாட்டு சந்தையும் இலக்காக கொண்டு செயற்படுகின்றார்.

**ஊழியர்கள்**

நிர்வாகம், பிளாஸ்ரிக் ஒட்டுதல், இரும்பு வார்ப்பு, மீள்சுழற்சி ஆலை போன்ற 4 பகுதிகளில் அண்ணளவாக 30 பேர் அளவில் பெண்கள் மற்றும் ஆண்கள் பணிபுரிகின்றனர்.





ஒட்டப்பட்ட வாகனப்பாகங்கள்



மோல்ட் பண்ணப்பட்ட உருவச்சிலைகள்




**டயானா வளர்ச்சியில் CCIY யின் பங்கு**

விருதுகளை வழங்கி கௌரவித்து ஊக்குவித்தமை, தொழில்நுட்ப மற்றும் நிதி முகாமைத்துவம் மற்றும் வியாபார அபிவிருத்தி தொடர்பான பயிற்சிப்பட்டறைகள் மூலம் அறிவூட்டியமை சர்வதேச தொழிற் சுற்றுலாவுக்கான வாய்ப்புக்களை பெற்றுக்கொடுத்தமை குறிப்பாக கேரளாவில் நடைபெற்ற தொழிற்கண்காட்சியில் பங்குபற்ற வழிப்படுத்தியமை , பார்கோட் பெற வசதிளை ஏற்படுத்தி கொடுத்தமை என்பவற்றை குறிப்பிட முடியும்.

**பெறப்பட்ட விருதுகள்**

தேசியரீதியில் சிலோன் வர்த்தக மன்றத்தினால் (Ceylon Chamber of commerce) நடைபெற்ற சிறந்த தொழில்முயற்சியாளர் தெரிவில் 2019 மற்றும் 2020 ம் ஆண்டுகளுக்கான சிறந்த தொழில்முயற்சியாளர் என்ற விருது வழங்கி கௌரவிக்கப்பட்டார். இதேபோல் வடமாகாணத்தை பிரதிநிதித்துவபடுத்தி 2019 ஆண்டு CCIY யினால் வழங்கப்பட்டது.

**தொடர்ச்சி...**

## சவால்களும் அதனை எதிர்கொண்ட விதமும்

அனைத்து வளர்ந்து வருகின்ற தொழில்முயற்சியாளர்களும் அநேக தடைகள் கசப்பான அனுபவங்கள் என்பவற்றை கடந்து வந்திருப்பார்கள். இதற்கு தவராசவும் விதிவிலக்கல்ல. தொடக்கத்தில் இலங்கை சுற்றாடல் அதிகாரசபை மீள்சுழற்சி ஆலை அமைக்கும்படி ஆலோசனை வழங்கியது ஆனால் எந்தவொரு மூலதனமும் இல்லாதநிலையில் வங்கிளிலிருந்து கடனைப்பெறவும் விரும்பாமல் மக்களின் தேவை அறிந்து வாகன உதிரிப்பாகங்களை ஒட்டுவதற்கான முயற்சியில் ஈடுபட்டார். இதன்மூலம் கணிசமான பணம் கிடைக்கப்பெற இவற்றினை மூலதனமாகக் கொண்டு அடுத்தகட்டத்திற்கு முன்னேறினார். ஆழமான கல்வி அறிவு இல்லாததன்மையில் இவ்வாறான வளர்ச்சி எப்படி சாத்தியம் என்று சமூகம் சொல்லும் அளவிற்கு இவருடைய கடின உழைப்பு காணப்பட்டதாக கூறுகின்றார் தவராசா.

## தேவைக்கும் காலத்திற்கும் ஏற்ப செயற்படுந்திறன்

கொரோனா காலங்களில் எல்லாத்துறையினரும் மந்தநிலையில் செயற்பட காலத்தின் தேவை உணர்ந்தவராக கிட்டதட்ட 12000 கால்மிதி கைகழுவும் உபகரணத்தை உருவாக்கி வடமாகாண பாடசாலைகள் மற்றும் நிறுவனங்களுக்கு விநியோகித்தார் தொடர்ந்து காஸ்சிலிண்டர் தட்டுப்பாடான காலங்களில் வீடுகள், கோட்டல்கள், சிற்றுண்டிச்சாலைகளை நோக்காகக்கொண்டு புகை வராத விறகினை உத்தமமான முறையில் பயன்படுத்துவதற்கு ஏதுவான அடுப்புகளை தயாரித்து சந்தைப்படுத்தி தனக்கான ஒரு அடையாளத்தை வர்த்தக சமூகத்தில் ஏற்படுத்திக்கொண்டார்.

நாட்டின் பொருளாதாரநிலையை கருத்திற்கொண்டு அந்நியசெலவாணியை ஈட்டும்முகமாக சாவகச்சேரிப்பகுதியில் காணி ஒன்றை வாங்கி நண்டுபண்ணை அமைப்பது இவரது முன்னோக்கிய சிந்தனையை குறிக்கின்றது.

## பல விடயங்களை கற்கும் திறன்

தற்சார்பு, உளவியல்சார்ந்த புத்தகங்களை கற்றும் இணையத்தளங்களை பார்வையிட்டும் அவ் எண்ணங்களையும் கருத்துக்களையும் தன்னுடைய வர்த்தக நடவடிக்கையில் பிரயோகப்படுத்துகின்றார் அதாவது தனது வெற்றிக்கு **"நீ என்னவாக வரவேண்டும் என்கின்ற எண்ணமே உங்களுடைய வாழ்க்கை"** என்ற ஒரு புத்தக கூற்றே இவருடைய முன்னேற்றத்திற்கு காரணம் என்று பெருமையாக கூறுகின்றார்..



வடிவமைக்கப்பட்ட கைகழுவும் தொட்டி

Handwash basin

இதுவரையில் அண்ணளவாக 500 நூல்களை இவர் வாசித்து பயன்பெற்றுள்ளார் என்பதும் குறிப்பிடத்தக்கது தன்னுடைய தொழில்சார்விடயங்களில் சந்தேகங்கள் ஏற்படின் உள்நாட்டு மற்றும் வெளிநாட்டு இணையவழிக்கற்கைகள் ஊடே அவற்றைதெளிவுபடுத்திக்கொண்டு அவற்றை சாத்தியப்படுத்துகின்றார்.

நவீன நண்டுப்பண்னை அமைப்பதற்கும் இந்தோனேசியா, மலேசியா, சீனா, கனடா போன்ற நாடுகளின் விடயங்களை அடியொற்றி செய்வதற்கு உத்தேசித்திருப்பது இவரது தொடர்ச்சியான கற்றல் திறனை காண்பிக்கின்றது.

## சிறந்த முகாமைத்துவம்

தனது அதிகாரத்தின்கீழ் பணிபுரியும் பணியாளர்கள்தான் என்னுடைய வளர்ச்சிக்கு முதுகெலும்பு என்ற கூற்றுக்கு இலக்கணமானவர். அதாவது ஒவ்வொருதுறை சார்ந்தும் கிடைக்கப்படுகின்ற வருமானத்தில் மூன்றில் ஒரு பகுதியை அத்துறைசார் பணியாளர்களுக்கு ஊதியமாக வழங்கி அவர்களை ஊக்குவிக்கும் முறைமையினைக்கொண்டுள்ளது என்பது சிறந்த மனித முகாமைத்துவத்தை பிரதிபலிக்கின்றது

இதுமட்டுமல்லாது புதிய விடயங்களை ஆராய்ந்து கற்கும் பழக்கமுடையவராக வலம்வரும் இவர் தான் கற்றவற்றை தனது ஊழியர்களுக்கும் கற்பித்து அவர்களையும் வளப்படுத்துகின்றார்.

**தக்கண பிழைக்கும்** (சூழலுக்கேற்ப தன்னை மாற்றியமைக்கும் உயிரி வாழும்) என்பதன் பிரகாரம் தேவைக்கும் காலத்திற்கும் ஏற்ப வாழுகின்ற கடின உழைப்பு, விடாமுயற்சி மற்றும் தக்க தருணத்தில் தீர்மானம் மேற்கொள்ளும் திறன்கொண்ட ஒரு சதராண தொழில் முயற்சியாளனின் வாழ்வியல் தொகுப்புதான் இக்கதை வடிவம்.


# Board of Directors



**Vice Chairman**
**Mr.V. K. Vignesh**



**Director**
**Dr. N. Manikaran**



**Director**
**Mr. Vasudevan Rasiah**



**Director**
**Mr.T.Senthan**



**Director**
**Mrs.Stalini Pirabu**



**Director**
**Mr. K. Vaseekaran**



**Director**
**Mr.Stephan Lenard**



**Director**
**Mr.S. Thirumaran**

# Staff



**Lead Project Officer**
**Mr. Thomas Hirl**



**Admin Manager**
**Mrs. S Keerthiha**



**Project Manager**
**Mr. K Premanandan**



**Project Officer**
**Mr. J. Recopayam**



**Office Assistant**
**Mr. R.Birunthan**

## புதன்கிழமை சந்தை-2022 (Wednesday Market-2022)

யாழ்ப்பாண பல்கலைக்கழக வணிக மற்றும் முகாமைத்துவ கற்கைகள் பீடம் ஒவ்வொரு புதன்கிழமைதோறும் புதன்கிழமை சந்தை-2022 (Wednesday market-2022) என்ற நிகழ்வின் மூலம் சிறிய நடுத்தர தொழில்முயற்சியாளர்களுக்கு தமது உணவு உற்பத்திகளை சந்தைப்படுத்துவதற்கு வாய்ப்பினை வழங்குகின்றது வடமாகாணத்திலுள்ள சிறிய நடுத்தர தொழில்முயற்சியாளர்கள் கீழே குறிப்பிடப்பட்டுள்ள விடயங்களுக்கிணங்க காணப்படின் CCIY உடன் நேரடியாகவோ அல்லது தொலைபேசி மூலமோ தொடர்புகொண்டு இவ் வாய்ப்பினை பெற்றுக்கொள்ள முடியும்.

1. உணவு உற்பத்தி மற்றும் அவ் தொழில்முயற்சியாளாரின் மேலதிக தகவல்கள்

2. குறைந்த விலையில் வாங்ககூடிய சிறிய பைக்கற்றுகளாகவும் பல்வேறு வகையான உணவு உற்பத்திகளாகவும் இருத்தல் கட்டாயமானது

**சிறந்த உணவு உற்பத்தி நடைமுறைகளுக்கான சான்றிதழ்**

GOOD MANUFACTURING PRACTICES (GMP)

யாழ்ப்பாணம் வர்த்தக கைத்தொழில் மன்றமானது தொழிற்முயற்சியாளர்களின் நலன் கருதி மேற்குறித்த (GMP) சான்றிதழை பெற்றுக்கொள்வதற்கு குறித்த ஆளனிகொண்டு செயற்ப்படுகின்றது. எனவே இது தொடர்பான விடயங்களுக்கு CCIY யினை நேரடியாகவோ அல்லது தொலைபேசி மூலமோ தொடர்புகொண்டு இச் சேவையினைப் பெற்றுக்கொள்ள முடியும்